**செய்தி வெளியீடு எண்: 857** **நாள்: 30.12.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.12.2017) நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

பாரதி கண்ட புதுமைப் பெண்
பாரதம் கண்ட புரட்சிப் பெண்
வள்ளுவன் வழியில் வாழ்ந்த பெண்
வரலாறு போற்றும் வெற்றி பெண்
தமிழ்நாட்டின் தவப்புதல்வி, தங்கத் தாரகை
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
என்னும் தெய்வத்தை வணங்கி.

பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில்
மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, இந்த எழுச்சியான நிகழ்ச்சியில்
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **ப. தனபால்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் எதிரிகளுடைய சூழ்ச்சிகளை எல்லாம் எப்படி வெல்ல வேண்டும் என்பதையும் கடந்த வரலாற்றைப் பற்றியும் மிக தெளிவாக, சிறப்பாக எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.**எஸ்.பி.வேலுமணி** அவர்களே!
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,**

மாண்புமிகு தமிழ்நாடு
சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
திரு. **பொள்ளாச்சி வி. ஜெயராமன்** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை
இயக்குநர் திரு. **சங்கர்** அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கே.ஆர். அர்ஜுனன்** அவர்களே!

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **சி. கோபாலகிருஷ்ணன்** அவர்களே!

குன்னூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **அ. ராமு** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைத் தலைவர்
முன்னாள் அமைச்சர்
திரு.மில்லர் அவர்களே,

நன்றியுரை ஆற்ற உள்ள
நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமதி. **ஜெ. இன்னசென்ட் திவ்யா** அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத் திட்ட உதவி பெறுகின்ற பயனாளிகளே!
பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்,
நீலகிரி மாவட்டத்திலே நடைபெற்று கொண்டிருக்கின்ற மிகச் சிறப்பான,

எழுச்சியான பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழாவிலே மக்கள் கடல் போல் கலந்து கொண்டுள்ள காட்சியை பார்க்கின்ற போது இதுவரை ஊட்டியில் இந்த அளவிற்கு கூட்டம் கூடியது இல்லை என்ற ஒரு வரலாற்றை சொன்னார்கள். அந்த வரலாற்றை படைத்திருக்கின்றார்கள். இந்த நீலகிரி மாவட்ட மக்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம். அந்த அளவிற்கு கழகத்தின் மீதும் இந்த இயக்கத்தின் மீதும் பாசம் வைத்திருக்கிறார்கள். இந்த அரசின் மீது இந்த மாவட்ட மக்கள் பாசம் வைத்திருப்பது இந்த கூட்டம் நிரூபித்து காட்டியிருக்கின்றது.

இந்த நீலகிரி மாவட்டத்தில், மலைகளும், ஆறுகளும், அணைகளும், பள்ளத்தாக்குகளும், மரங்களும், மலர்களும், செடிகளும் நிறைந்து, நீல வண்ண மேகத்தோடு
பச்சை வண்ண புல் தரைகள் கொஞ்சி குலாவும்
நீலகிரி மாவட்டம் இயற்கை அன்னையின்
அழகு மகளாக, மலைகளின் அரசியாகத் திகழ்கிறது.

1868 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்திலிருந்து தனியே பிரிக்கப்பட்டது நீலகிரி மாவட்டம்.

கங்கர்கள், கடம்பர்கள், ஹொய்சாளர்கள், நாயக்கர்கள், மைசூர் அரசர்கள், கேரளவர்மா, ஆங்கிலேயர்கள் ஆகியோர் நீலகிரி பகுதிகளை ஆண்டிருக்கிறார்கள்.

இம்மண்ணின் மைந்தர்களான படுகர், இருளர்,
குறும்பர், பணியர், தோடர், கோத்தர் மற்றும்
காட்டு நாயக்கர் ஆகியோர் இம்மாவட்டத்தில் ஒற்றுமையுடன் வாழ்ந்து,
இம்மாவட்டத்தின் தொன்மை காத்து வருகின்றனர். இம்மாவட்டத்தின்
முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்றனர்.

மேலும், இம்மாவட்டத்தில் பெருவாரியாக வசிக்கும்
படுகர் மற்றும் பழங்குடி இன மக்கள் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீது அளவு கடந்த பாசமும், அன்பும்,
அக்கறையும் கொண்டவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதெல்லாம் நீலகிரி மாவட்டத்திற்கு வருகிறார்களோ, அப்போதெல்லாம் ஒரு தாயைப் பார்க்க வரும் குழந்தைகளைப் போல் பெருந்திரளாகக் கூடிவந்து மாண்புமிகு அம்மா அவர்களிடம் அன்பு மழை பொழிவார்கள்.

நீலகிரியை **"உயிர்ச் சூழல் மண்டலமாகவும்"** இந்தியாவின் முதல் **"உயிர்க் கோள் காப்பகமாகவும்"** ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா,
மலை ரயில், ஊட்டி ஏரி, அணைகள்,
சுற்றுலா செல்பவர்களின் சொர்க்கமாகத் திகழும் தொட்டபெட்டா, அவலாஞ்சி,
முதுமலை வனவிலங்கு சரணாலயம்,
சிம்ஸ் பார்க், குன்னூர் கல்லட்டி நீர் வீழ்ச்சி,
கோத்தகிரி போன்ற ஏராளமான சுற்றுலா மையங்களை கொண்டது நீலகிரி
மாவட்டமாகும். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால்
சுற்றுலா செல்பவர்களின் சொர்க்கமாக நீலகிரி
மாவட்டம் திகழ்கிறது.

தேயிலை, காப்பி, உருளை, கேரட், முட்டைகோஸ், முள்ளங்கி, பீட்ரூட், மிளகு,
டர்னிப், வெங்காயம்,
பூண்டு, அவரை, பட்டாணி, கேழ்வரகு, சாமை,
வாழை, தென்னை, நெல், இஞ்சி என
பலவகை விளைச்சலுக்கு ஏற்ற வளமான
மண்ணாகவும் நீலகிரி மாவட்டம் திகழ்கிறது.

பைகாரா, மரவகண்டி, மாயார், குந்தா போன்ற
நீர்மின் நிலையங்களால் நீலகிரி ஒளிர்வதுடன்
மற்ற மாவட்டங்களுக்கும் வெளிச்சம் கொடுக்கிறது.

150 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 6.9.2005 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

தேயிலை, ஜெரேனியம், வாசனைத் திரவியம்,
தைலம் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தன்னகத்தே கொண்டது நீலகிரி
மாவட்டமாகும். மேலும் ஏற்றுமதி தரம் கொண்ட ஆர்கிட் வண்ணப் பூக்கள்,
வீட்டில் தயாரிக்கப்படும் தரம் வாய்ந்த சாக்லேட்டுகள், வர்கி ஆகியவை ஊட்டிக்கு
தனி பெருமை சேர்க்கின்றன.

கோத்தகிரி அருகே உள்ள கரிக்கையூர் பகுதியில்
4500 ஆண்டுகளுக்கு முன்பே கற்கால மனிதன் கால்நடைகளுடன்
வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பாறை ஓவியங்களாக சித்தரிக்கப் பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திரைவாழ்க்கையிலும் , அரசியல் வாழ்க்கையிலும் நீலகிரி முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. **'அன்பே வா'** மற்றும் **'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்'** போன்ற திரைப்படங்களின் பெரும்பாலான காட்சிகள் நீலகிரியில் படமாக்கப்பட்டவை. அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திரைப்பாடல்கள் பெரும்பாலும் உதகையில் படப்பிடிப்பு நடத்தப் பட்டவைகளே.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோதுதான், **சத்துணவுத் திட்டத்தின் விரிவாக்கத்தை அறிவித்து** அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் முயற்சியால் உதகையில் உள்ள **பார்சன்ஸ் Valley** அணை மேம்படுத்தப்பட்டு தூர்வாரப்பட்டது. அதன் காரணமாகத்தான் இன்றைக்கும் உதகை மக்களுக்கு இந்த அணை நீர்ஆதாரமாக விளங்கி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மலைகளையும் மலை வாழ் மக்களையும் மிகவும் நேசித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மலைவாழ் மக்களுக்கு ஒரு துன்பம் என்றால் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டி அவர்களின் துயர் துடைப்பவர்.

சாதாரண மனிதனாக இருந்து கொண்டே
மக்கள் பணி ஆற்றலாம் என்ற இலக்கணத்துடன் நடிகரான காலத்திலிருந்தே
மக்களுக்கு தொண்டு செய்து வந்தவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒருமுறை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நேர்காணல் செய்தார்கள். அப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
**"நீங்கள் திரையுலகில் சாதிக்க விரும்புவது எது ?"**
என்று கேட்டார்கள். அதற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்த பதில் அவர்களின் ஆழமான உள்ளத்திலிருந்து வந்தது.

**"நமது பண்பாட்டை, கலாச்சாரத்தின் தனித்தன்மையை, பிற மொழியினரும், பிற நாட்டினரும் உணர்ந்து மதிக்கும் வகையில், சினிமா கலையின் மூலமாக தொண்டு செய்ய வேண்டும்"**, என்பதுதான் புரட்சித்தலைவர் அவர்களின் பதில்.

நேர்காணலுக்காக ஒரு பேச்சும், சொந்த வாழ்க்கையில் ஒரு பேச்சும் என்ற நிலையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருகாலமும் நடந்து கொள்ளவில்லை.

தமிழர்களுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தை, நீதியை, பழமையை,
பறைசாற்றுவதாகவே
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின்
அனைத்துப் படங்களும் அமைந்திருந்தன.

**‘பிறந்த நாடே சிறந்த கோயில்**
**பேசும் மொழியே தெய்வம்; இதை**
**மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்**
**கோபுரமாகும் கொள்கை’**
என்று **கொள்கை குன்றாக** வாழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

தாய் நாட்டையும், தாய் மொழியையும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதிகமாக நேசித்தார்கள் என்பதை அவர்கள் நடித்த படங்களைக் கொண்டே நாம் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
**“பொம்மை”** என்ற சினிமா இதழுக்காக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பேட்டி கண்டபோது
‘உங்கள் வீட்டில் பூஜை அறைகள் உண்டா ?
எந்தக் கடவுளை நீங்கள் வணங்குகிறீர்கள் ?
என்று கேள்வி கேட்டார்.

**“என் பூஜை அறையில் என் தாய், தந்தை, என் மனைவியின் தாய், தந்தை மற்றும் மகாத்மா காந்தி ஆகியோரின் படங்கள் உள்ளன. கூடவே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியும் உள்ளது. இவர்கள் தான் நான் வணங்கும் தெய்வங்கள்”** என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
அம்மா அவர்களின் கேள்விக்கு பதில் அளித்தார்.

இந்தப் பதிலில் எத்தனை ஆழமான தத்துவம்
பொதிந்து கிடக்கிறது பாருங்கள்.

நாட்டை நேசிக்க வேண்டும். நாட்டை தெய்வத்திற்கு நிகராக வணங்க வேண்டும் என்ற கோட்பாட்டோடு, பூஜை அறையில் இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியின் படத்தையும் வைத்து வணங்குவது நமக்கு மகிழ்ச்சியை தருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காந்திஜியை தெய்வமாக மதிப்பதின் மூலம் நாட்டையே புனிதமாக கருதினார் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

**தன் தாய், தந்தை, மாமனார், மாமியார்** ஆகியோரின் படங்களை பூஜை அறையில் வைத்து வணங்கும் இல்லற மாண்பை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த உலகுக்கு சொன்ன விதம் மிகவும் அருமையானது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் மனைவி வீட்டாரையும் மதிக்கும் பண்பாடு வளருமேயானால் எந்தக் குடும்பத்திலும் குழப்பங்கள், சண்டை சச்சரவுகள் வராது. குடும்பம் மகிழ்ச்சியாக நடக்கும் என்பதை அனைத்து தலைமுறைக்கும் சொன்னவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

**பூஜை அறையில் முகம் பார்க்கும் கண்ணாடி ஏன் ?**
என்ற கேள்வி எழலாம்.

**‘உன்னையே நீ மதிக்க தெரிந்து கொள்’**
என்பதுதான் அதன் தத்துவம்.
எனவே, தன் வீட்டுப்பூஜை அறையையே மிகப்பெரிய தத்துவத்தோடு அமைத்திருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்தான்,

**தமிழ்நாட்டு மக்களின் மனதை கவர முடிந்தது.**
**தமிழ்நாட்டை தொடர்ந்து 11 ஆண்டுகள் ஆளமுடிந்தது.**
**மறைந்து 30 ஆண்டுகாலம் ஆகியும்**
**மக்கள் மனதில் நிரந்தரமாக வாழ கூடிய ஒரே தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.**

நேற்றைய தலைமுறை மட்டுமல்ல,
இன்றைய தலைமுறை மட்டுமல்ல,
நாளைய தலைமுறையும் வாழையடி வாழையாக,
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை தங்கள் வீட்டு பிள்ளையாக,
தம் தலைவராக,
தங்கள் வீட்டு பெரியவராக மதிக்கும் உலகத்தில்
வேறு எந்த தலைவனுக்கும் வாய்க்காத பெரும்பேறாக இதை கருத வேண்டும்.

**‘என் வாழ்க்கையே என் செய்தி’**
என்றார் மகாத்மா காந்திஜி அவர்கள்.
மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை எப்படி மக்களை வழிநடத்தும் ஒரு வழிகாட்டியாக இருக்கிறதோ அப்படித்தான்.. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையும் மக்களை உயர்த்தும் ஒரு நல்ல முன்மாதிரியாக இன்றைக்கும் நிலவுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
தன் வாழ்க்கையில் கடைபிடித்த நல்ல நெறிமுறைகள், பள்ளிப்பாட நூலில் சேர்க்க வேண்டியவையாகவே அமைந்திருக்கின்றன. அதற்கு ஒரு சம்பவத்தை இங்கே நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் வீட்டில் **‘குறள் உண்டியல்’** என்று
ஒன்றை வைத்திருந்தார்கள். தினமும் காலையில் கவியரசர் கண்ணதாசன்,
நடிகர் திலகம் சிவாஜிகணேசன்
போன்ற பிரபலங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வீட்டுக்கு வந்து விடுவார்கள்.

அறிஞர்களிடையே **‘குறள் பந்தயம்’** நடக்கும்.
**அதாவது 10 குறள்களை தங்குதடையின்றி சீர்பிரித்து உச்சரிப்பு பிழையின்றி மனப்பாடமாக சொல்ல வேண்டும் என்பதுதான் போட்டி.**
குறளைக்கூறும் போது தவறு செய்பவர்கள்,
அந்த உண்டியலில் ஒரு ரூபாய் போட வேண்டும்.
அந்த உண்டியலில் அதிகமாக ஒரு ரூபாயை
போட்டவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

**ஒருபக்க வசனத்தை ஒரே மூச்சில் மனப்பாடம் செய்யும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் இருபது வரிகளை உடைய 10 குறள்களை மனப்பாடமாக சொல்ல முடியவில்லையே, ஏன் ?**
என்று அவருடைய நண்பர் ஒருமுறை
மனம் திறந்து கேட்டுவிட்டார்.

அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிரித்துக் கொண்டே..
**“இந்த உண்டியல் பணத்தில்தான் ‘தமிழ் கலை களஞ்சியம்’ வாங்க இருக்கிறோம்,**

**அதற்கு பணம் வேண்டாமா ? அதற்குத்தான் விட்டுக் கொடுக்கிறேன்**"
என்றார்கள்.

அந்த அறிஞர்கள் குறளை சரியாக சொல்வதால்
**குறள் உண்டியலில்** காசே சேருவதில்லை. அதனால் '**தமிழ் கலை களஞ்சியம்**'
வாங்க முடியாமல் போய்விடுமோ என்று பயந்து தான் உண்டியலில்
பணத்தை போட்டு தமிழ் மீது இருந்த பற்றைக் காட்டியவர் மாண்புமிகு
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒரு படத்தின் சம்பளத்தையே இந்திய எல்லைப் போர் நிதிக்காக கொடுத்தவர்
தேசப்பற்று உள்ளவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதைப்போலத் தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பாகிஸ்தான்
போர் நிதிக்காக அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியிடம்
தான் அணிந்திருந்த தங்க நகைகள் அனைத்தையும் கழட்டிக் கொடுத்து
தேசப்பற்று மிகுந்த தலைவர் என்று பெயர் பெற்றவர் இதயதெய்வம் புரட்சித்
தலைவி அம்மா அவர்கள்.

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தர்ம சிந்தனையும் நமது இருபெரும்
தலைவர்களுக்கும் இயற்கையாகவே அமைந்திருந்தது. அதுவே அவர்களுக்கு
பலமாக அமைந்தது. மக்களை கவரும் மகாசக்தியாக அவை விளங்கின. இன்னும்
நூறாண்டுகள் ஆனாலும் அழிக்க முடியாத ஒரு பேரியக்கத்தை தொடங்கவும்,
காக்கவும் அவர்களால் முடிந்தது.

'**தாய் தந்தை வைக்கும் இயற்பெயருக்கு**
**நாம் பொறுப்பல்ல – நாட்டில் நாம் எடுக்கின்ற**
**நல்ல பெயருக்கு நாம்தான் பொறுப்பு**' என்ற தத்துவத்திற்கு நமது இருபெரும்
தலைவர்களும் உதாரணமாகத் திகழ்ந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் பெயரே மறக்கும் அளவிற்கு
அவருக்கு மக்கள் வைத்த '**மக்கள் திலகம், புரட்சித்தலைவர், பொன்மனச்**
**செம்மல்**' என்ற பெயர்கள்தான் அதிகமாக பேசப்பட்டன.

அதைப்போல.. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இயற்பெயரே
மறக்கும் அளவிற்கு '**புரட்சித்தலைவி**' '**பொன்மனச் செல்வி**' என்ற பெயர்கள்
மக்கள் மனதில் பதிந்தன. அதையெல்லாம் மிஞ்சும் அளவிற்கு '**அம்மா**' என்ற

ஒற்றைச் சொல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு மிகச் சிறந்த அடையாளமாகத் தமிழகத்திலே திகழ்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
மக்களுக்கு ஆற்றிய உரை ஒன்றில்..
**“என் பெற்றோர் வைத்த பெயரே மறந்து போகும் அளவிற்கு நீங்கள் அழைக்கின்ற ‘அம்மா’ என்கின்ற ஒரு சொல்லுக்காகவே என் வாழ்நாட்களை உங்களுக்காக அர்ப்பணித்து உழைத்துக் கொண்டிருக்கிறேன்”,** என்று மனம் உருக பேசியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
கலை உலகில் காலடி எடுத்து வைத்து பேசிய முதல் வசனமே **‘அம்மா....அம்மா.....’** என்று அழைப்பதுதான். அவர் அழைத்த அந்த அம்மா என்கின்ற வார்த்தைதான் பின்னாளில் உலகையே அவரை ‘அம்மா’ என்று அழைக்க வைத்ததோ ? என்று நாம் நினைக்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்கின்ற மிகச்சிறந்த சாதனைப் பெண்மணி வாழ்ந்த சம காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கிறோம் என்ற பெருமை நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைப்போல் துணிச்சலும், வீரமும், அறிவும் மிக்க ஒரு பெண்மணியை நம் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறோமா என்றால் ‘இல்லை’ என்ற பதில்தான் வரும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் துணிச்சலையும் வீரத்தையும் எடைபோட்டுத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை அரசியல் களத்தில் இறக்கி எதிரிகளை பந்தாட வைத்தார்கள்.

ஒற்றைப் பெண்மணியாக இருந்து, எதிரே இருந்த பெரிய கூட்டத்தையே கதிகலங்க வைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.
கடந்த பாராளுமன்ற தேர்தலில் 39க்கு
37 இடங்களைப் பெற்று இந்தியாவிலேயே நாடாளுமன்றத்தில் மிகப்பெரிய மூன்றாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தை உருவாக்கியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

‘சவாலே, சமாளி’ என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாடலை நாம் உற்றுக் கவனித்தால் மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்களின் குணம் எப்படிப்பட்டது என்பது நமக்கு விளங்கும்.

**“சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு**
**தென்றலே உனக்கேது சொந்த வீடு”**
**என்ற பாடலில்**

**“வளரும் தென்னை மரமே –**
**நீ வளர்ந்ததைப்போல் நான் நிமிர்ந்து நிற்பேன்**

**வணங்கி வளையும் நாணல் –**
**நீ வளைவதைப்போல் நான் தலை குனிவதில்லை”.**

என்று கடைசிவரை யாருக்கும், தலைகுனியாமல்
நிமிர்ந்து வாழ்ந்த ஒரே தலைவர்
நமது மாண்புமிகு **‘புரட்சித் தலைவி அம்மா’** அவர்கள்.

தன் வழியில்தான் தன் தொண்டர்களையும்
அவர்கள் வழி நடத்தினார்கள். நமது கட்சியை
ராணுவக் கட்டுப்பாட்டோடு முதன்முதலில் நடத்தியது
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

ஒருமுறை நேர்காணலில் ஒரு பத்திரிகையாளர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம்
**“உங்களுக்குப் பிறகு அதிமுகவின் தலைமைப் பொறுப்பை ஏற்க தகுதியுடையவர் யார் ?”**
என்று கேட்டார்.

‘தகுதியுடையவர் யார் என்பதை கழக உடன்பிறப்புகளே முடிவு செய்வார்கள்’ என்ற ஒரு பதிலை பதிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப்பிறகு கழகத்தொண்டர்கள் அனைவரும் சேர்ந்துதான் கழகத்தை காப்பாற்றி வருகிறோம். ஒவ்வொருவரும் ஒரு தூணாக நின்று, இன்றும் கழகத்தை நிலைநிறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள்
தமிழ்நாட்டிற்கு வழங்கிய திட்டங்கள்தான்
நமக்கு மிகப்பெரிய பலமாக இருக்கிறது.
ஏழை, எளிய மக்களுக்காக
திட்டங்களை தொடர்ந்து நாம்

நடைமுறைப்படுத்திவந்தாலே..
மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல
இன்னும் நூறாண்டுகள் கழகம்
வேர் ஊன்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

நாங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் வழியில் திட்டங்கள் போடுவதிலும்,
அதை விரைந்து செயல்படுத்துவதிலும் சிறந்தவர்கள் என்பதை இங்கு நாங்கள் அறிவிக்கின்ற திட்டங்களைக் கொண்டே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

உதகை நகராட்சிக்கான 27 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 5 கோடி ரூபாய் செலவில் நஞ்சநாடு இன்ட்கோ கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உட்பட 57 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 258 பணிகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக
துவக்கி வைத்துள்ளேன்.

நீலகிரி மாவட்டத்தில் 95 கோடியே 30 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரிய 2 பணிகள் உட்பட
272 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
ஆயிரத்து 88 பணிகளுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல்
நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த 19 ஆயிரத்து
79 பயனாளிகளுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 81 கோடியே 4 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

**இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை
தமிழ்நாடு முழுவதும் 15 ஆயிரத்து 832 கோடியே
66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 ஆயிரத்து 28
பணிகளை துவக்கி வைத்தும், 6 ஆயிரத்து 399
கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
7 ஆயிரத்து 212 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.
ஆக மொத்தம் 22 ஆயிரத்து 232 கோடியே 5 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 43 ஆயிரத்து 240 பணிகள்
நடைபெற்று வருகின்றன.**

நீலகிரி மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

சுமார் **37 ஆயிரத்து 500 சிறு குறு விவசாயிகள்**
கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய
சுமார் 152 கோடி ரூபாய் விவசாயக் கடன்
தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட வேளாண்மை கூட்டுறவு
சங்கங்கள் மூலம் சுமார் 1 லட்சத்து 13 ஆயிரம்
விவசாயிகளுக்கு சுமார் 610 கோடி ரூபாய்
பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில்
சுமார் 45 ஆயிரம் பயனாளிகளுக்கு
28 கோடியே 48 லட்சம் ரூபாய் நிவாரணம்
வழங்கப்பட்டுள்ளது.

49 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
32 ஆயிரத்து 330 மாணாக்கர்களுக்கு விலையில்லா
மடிக்கணினிகள் இந்த நீலகிரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழை பெண்களின் திருமண உதவி
திட்டத்தின் கீழ் சுமார் 9,500 பெண்களுக்கு
சுமார் 23 கோடி ரூபாய் நிதி உதவியும்,
15.15 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய திருநாட்டிலேயே இப்படிப்பட்ட திட்டத்தை
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் கொண்டு வந்தார்கள்
என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிகள் மூலம்
சுமார் 439 கோடி ரூபாய் நேரடி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

8 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 1, 464 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு
வழங்கப்பட்டுள்ளது.
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி

உதவி திட்டத்தின் கீழ் 73 ஆயிரம் கர்ப்பிணி பெண்களுக்கு சுமார் 25 கோடி
ரூபாய்
உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய
பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் சுமார் 47 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் 2 ஆயிரத்து 790
வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தனிநபர் இல்லக் கழிவறைகள் திட்டத்தின் கீழ்
38 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
32 ஆயிரத்து 771 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையின் ‘தாய் திட்டம்’
உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ்
சுமார் 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
சுமார் 1300 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை
உறுதித் திட்டத்தின் கீழ் சுமார் 103 கோடி ரூபாய்
மதிப்பீட்டில் சுமார் 17 ஆயிரம் பணிகள்
முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் பேரூராட்சிகளில்
பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 1,500
பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர்,
கூடலூர், நெல்லியாளம் நகராட்சிகளில்
பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் 128 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரத்து 156 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில்
சுமார் 48  கோடி ரூபாய் மதிப்பீட்டில்
சுமார் 180 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான

கழகத்தின் சார்பில் கூடலூரில்
சுமார் 204 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
66/11 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் சுமார்
500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 1350 கிலோ மீட்டர் புதிய தாழ்வழுத்த மின் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித் துறையின் சார்பில்  மொத்தம் 32 பணிகள்
77 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில்  நெடுஞ்சாலைத் துறை மூலம்
கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 316 கோடி ரூபாய் செலவில் சுமார் 640 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்களாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களாலும் தமிழ்நாட்டு மக்கள்
இன்னும் பல நூறாண்டுகள் நற்பலன்களை அனுபவிப்பார்கள். எனவே,
தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
இன்னும் பல நூறாண்டுகள் ஆட்சி செய்யும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்து அதை தமிழ் மக்களின் மனதில் வேரூன்ற வைத்த புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர்  காலம் காலமாக
இந்த மண்ணில் நிலைத்து நிற்கும்.

**எம்.ஜி.ஆர். என்ற பெயர் – எங்களுக்கு மந்திரம்.**
அவருடைய பெயரைச் சொல்லியே
நாங்கள் எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்வோம்.
அவருடைய பெயருக்கு அத்தனை மகிமை இருக்கிறது.

எங்களை உருவாக்கிய மாண்புமிகு தலைவர்களின்
ஆசி எங்களுக்கு இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் ‘ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டிய கதையாக ஒரு சிலர் கூடா நட்புக் கொண்டு
இந்த மகத்தான இயக்கத்திற்கு களங்கம் விளைவிக்க முயற்சி செய்கிறார்கள்.

**அவர்களின் கனவும், முயற்சியும்**
**ஒரு காலமும் வெற்றி பெறாது’**

இதை ஒரு கதையின் மூலம் கூறினால்
உங்களுக்கு நன்கு புரியும்'

ஒரு ஏரிக்கரையில்
எலியும், ஆமையும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.
ஆமை, ஏரி நீருக்குள் மூழ்கி
சில மணி நேரங்கள் நீந்திவிட்டு கரைக்கு வரும்.
இதை கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் எலிக்கு தானும்
ஆமையைப்போல்
நீருக்குள் மூழ்கி நீந்த வேண்டுமென்று
ஆசை வந்தது.
ஒரு நாள் தன் ஆசையை
தனது நண்பனான ஆமையிடம் சொன்னது.

**'நீ – நீருக்குள் மூழ்கினால்**
**நீந்த தெரியாது. எனவே, நான் நீரில்**
**நீந்தும்போது நீ எனது முதுகில்**
**உட்கார்ந்து கொள். உன்னை நீருக்குள்**
**கொண்டு சென்று சுற்றிக் காட்டுகிறேன்'** ,
என்று ஆமை சொன்னது.

அதன்படியே ஒரு நாள் ஆமை
ஒரு கயிற்றின் ஒரு முனையை எலியின் காலிலும், மறுமுனையை தன் காலிலும் கட்டியது.
**'ஏன் இப்படி கட்டுகிறாய் ?'** என்று எலி கேட்டது.

**'ஒரு தற்காப்புக்குத்தான்,**
**நான் நீந்தும்போது – நீ நீரில் விழுந்தாலும்**
**உன்னை நான் காப்பாற்றுவதற்கு எளிதாக இருக்குமல்லவா ? –**
**அதற்காகத்தான்'.**

**'நாம் நீருக்குள் நீந்தும் போது,**
**உனக்கு மூச்சு முட்டினால், என் கழுத்தைத்தட்டு,**
**நான் நீருக்கு வெளியே வந்து விடுவேன்.**
**மூச்சு விட்டுக்கொண்ட பிறகு மீண்டும் நீருக்குள்**
**போய் நீந்தலாம்'** என்று ஆமை கூறியது.

ஆமையின் அறிவையும், அன்பையும் கண்டு
எலி மகிழ்ச்சியடைந்தது. ஆமை, எலியை
முதுகில் ஏற்றிக்கொண்டு நீருக்குள் மூழ்கி நீந்த ஆரம்பித்தது. எலிக்கு மூச்சு திணறும்போது
ஆமையின் கழுத்தை தட்டவே,
ஆமை நீருக்கு வெளியே வந்தது.

இப்படியே இரண்டும் வெகுநேரம்
நீருக்குள் போவதும் வெளியே வருவதுமாக இருந்தன.

இதை வானத்தில் வட்டமடித்துக்கொண்டிருந்த
ஒரு கழுகு பார்த்து, அவற்றை இரையாக்கிக் கொள்ள நினைத்தது. கழுகு வானத்திலிருந்து
தங்களைப் பார்ப்பதை ஆமை கவனித்து விட்டது.
எனவே, முதுகில் எலி இருப்பதைக்கூட மறந்து
தன்னைக் காப்பாற்றிக்கொள்ள
நீருக்குள் மூழ்கி மிகவும் ஆழத்திற்கு சென்றது.

எனவே, எலி மூச்சுத்திணறி இறந்து போனது.
இறந்த பின் எலி நீருக்கு வெளியே வந்து மிதந்தது.
இதைப் பார்த்த கழுகு, எலியை கொத்தித் தூக்கிக்கொண்டு பறந்தது.
எலி, ஆமையுடன் கயிற்றால் கட்டப்பட்டிருந்ததால், எலியுடன் ஆமையையும் தூக்கிக்கொண்டு
கழுகு பக்கத்திலிருந்த மலைக்குள் சென்று
அந்த இரண்டையும் இரையாக்கிக் கொண்டது.

அப்போது, உயிர் போகும் தருவாயில் ஆமை
கழுகிடம் சொன்னது,

‘கழுகே, நாங்கள் கூடா நட்புக் கொண்டிருந்ததால் எங்களுக்கு இந்த ஆபத்து வந்தது.
**கூடா நட்பு கேடாய் விளையும்** என்ற
பழமொழிக்கு நாங்கள் தான் உதாரணம்’
என்று அழுதபடியே உயிரை விட்டது.

எனவே. பலர் கழகத்தின் கொள்கையை மறந்து , கூடா நட்பு கொண்டு, எதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற

கழகத்தை நிறுவி வெற்றிகரமாக நடத்தி காட்டினார்களோ,
அக்கழகத்தினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து உலகமே வியக்கும் வண்ணம்
மாபெரும் வெற்றி இயக்கமாக, தொடர்ந்து இரண்டாம் முறை கழகத்தினை வெற்றிபெற வைத்து
தமிழகத்தின் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தினார்களோ, அதை எல்லாம் மறந்து விட்டு, எதிரிகளுடன் கூடா நட்பு கொண்டு, தனியாக சாதித்துவிட்டதாக கருதி, அகம் பாவத்துடன், பேசி திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் நட்பு தங்களுக்கே ஆபத்தானது என்பதை அவர்களுக்கு காலம் அவர்களுக்கு உணரவைக்கும்.
அவர்களை உண்மையான தொண்டர்கள்
உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்,
காலம் என்கிற கழுகு அவர்களை அழித்துவிடும் என்பதை இந்த தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நீலகிரி மாவட்டத்தில் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் காண முடிந்தது. நான் இந்த மேடைக்கு வந்தபொழுது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகைப்படத்தை இங்கே பார்த்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தலையிலே ஒரு துண்டைக் கட்டியிருக்கின்ற ஒரு காட்சியைப் பார்த்தேன். அப்பொழுது எங்களுக்கெல்லாம் நினைவு வந்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இங்கே மலர்க்கண்காட்சியை துவக்கி வைக்க வந்த நேரத்தில், இங்கே ஒரு பகுதியிலே படுகர் இனப் பெண்களோடு ஆடி மகிழ்ந்த காட்சியை நாம் நினைவில் பார்க்கின்றபொழுது, இன்னும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மாவட்ட மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் நமக்குத் தோன்றுகின்றது. அவர் இந்த மண்ணில் இருந்து மறைந்திருக்கலாம், ஆனால் இந்த

மாவட்ட மக்கள் மனதிலே இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வமாக இருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணுகின்றோம்.

அதேபோல, ஊட்டி பகுதியிலே ரோஜா மலர்களைக் காணுகின்றபொழுது, இன்றைக்கும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவு வருகின்றது. 1995–ஆம் ஆண்டு உதகையில் ரோஜாத் தோட்டம் அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது. கிட்டத்தட்ட 4000 ரோஜா ரகங்கள் கொண்ட மலர்களை மொத்தம் 30,000 ரோஜா செடிகள் மூலமாக நாம் காணுகின்ற காட்சியை உருவாக்கிக் காட்டியவர் நம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட உன்னத தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி சென்றது இன்றைக்கும் நம்முடைய மனதிலே நினைவாக நினைத்துக் கொண்டிருக்கின்ற அளவிற்கு அவர்களுடைய பங்கு இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோல, எனக்கு முன்னாள் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நாம் ஒன்றை நினைத்துப் பார்க்கவேண்டும். நடைபெற்று முடிந்த தேர்தல், ஒரு வித்தியாசமான தேர்தல். மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன் இருக்கின்ற கழகத்தினுடைய நிர்வாகிகளும் சரி, இங்கே வந்திருக்கின்ற பொதுமக்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலிருக்கின்ற மக்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலிருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, அல்லது இந்தியாவில் இருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, உலகத்தில் இருக்கின்ற எந்தவொரு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வராத எண்ணம் கொண்ட ஒரு வித்தியாசமான தேர்தல்தான் இந்த ஆர்.கே.நகர் தேர்தல். ஆகவே, இதற்கு முன்பு

திருமங்கலம் பார்முலா என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதை மிஞ்சி, இப்பொழுது ஆர்.கே.நகர் பார்முலா என்ற ஒரு பார்முலாவைக் கண்டுபிடித்து தில்லுமுல்லு செய்து வெற்றி பெற்றிருக்கின்றார். அந்த பார்முலா ஹவாலா பார்முலா. இதுவரைக்கும் யாரும் சிந்தித்ததுகூடக் கிடையாது. எவ்வளவோ அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள், எவ்வளவோ சிந்தனையாளர்கள் இருக்கின்றார்கள். எவருடைய எண்ணத்திற்கும் எட்டாதது ஒரு நபருக்கு எட்டியது என்று சொன்னால், அவர் எப்படிப்பட்ட கிரிமினலாக இருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஹவாலா பார்முலா மூலம் வெற்றி பெற்று, எங்களை துரோகி என்று சொல்கின்றார். யார் துரோகி என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆக, இப்படிப்பட்ட பார்முலாவைக் கொண்டு வந்தவர்தான் துரோகி என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுகாட்ட விழைகின்றேன்.

எனக்கு முன்னாலே அண்ணன் அவர்கள் சொன்னார்கள், மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன்னால் வீற்றிருப்பவர்களும் சரி, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் முன்னோடிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் கட்சியிலே இணைகின்றபொழுது உழைத்துத்தான் முன்னுக்கு வருவார்கள். உழைக்காமலேயே முன்னுக்கு வந்தவர் என்று சொன்னால், அது டிடிவி தினகரன் ஒருவர் தான். அதைத்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அவருடைய உழைப்பு என்ன ? எந்த உழைப்பும் கிடையாது. அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அம்மா வீட்டிலே தங்கியிருந்து அம்மாவிற்கு உதவி செய்தார். அந்த உதவியின் மூலமாக கொல்லைப்புறத்தின் வாயிலாக உள்ளே புகுந்தவர்தான் இந்த டிடிவி தினகரன். இவர் முதல் முறை வெற்றி பெற்ற இடத்தில், அடுத்தமுறை போட்டியிட்டு தோற்றார். எங்கே மக்கள் செல்வாக்கு இவருக்கு இருக்கின்றது. இப்பொழுது ஹவாலா பார்முலாவை

வைத்து நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். மக்களை நேரடியாக சந்தித்து, அதன் மூலமாக நீங்கள் வெற்றி பெற்றவர்கள் அல்ல. இந்த நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும். ஆகவே, துரோகிகள் நாங்கள் அல்ல, நாங்கள் அத்தனைபேரும் உழைத்தவர்கள், உழைத்து முன்னுக்கு வந்தவர்கள். மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன்னால் வீற்றிருப்பவர்களும் சரி, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் தொண்டர்களும் நிர்வாகிகளும் உழைத்துத்தான் இந்தப் பதவிக்கு வந்திருக்கின்றோம்.

மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்கள் எப்படி அவர் உயர்ந்தார் என்பதை கோடிட்டுக் காட்டினார்கள். 1974–ல் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அப்பொழுது அண்ணா திமுக என்ற இயக்கத்தை உருவாக்கினார்கள். அப்பொழுது கழகத்திலே நான் இணைந்தேன். என்னுடைய சிலுவம்பாளையம் என்ற சிறு கிராமத்திலே கிளைக் கழக செயலாளராக நான் பொறுப்பை முதலில் துவங்கினேன். அப்பொழுது படிப்படியாக ஒன்றிய எம்.ஜி.ஆர் அமைப்புப் பொறுப்பாளராக, அதற்குப் பிறகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவோடு இணைந்தபிறகு மாவட்ட கழகத்தின் இணைச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று பல்வேறு பொறுப்புகளை எனக்குத் தந்தார்கள். கழக அமைப்புச் செயலாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர், அதற்குப் பிறகு அம்மா மறைவிற்குப் பிறகு தலைமை நிலையச் செயலாளர் என்று பல்வேறு பொறுப்புகளை எங்களுக்கு வழங்கினார்கள். எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு விசுவாசமாக, இந்த இயக்கத்திற்கு விசுவாசமாக உழைத்த காரணத்தினாலே, இருபெரும் தெய்வங்கள் ஆசியோடு, நிர்வாகிகள் துணையோடு, மக்கள் துணையோடு இந்தப் பதவியை எங்களுக்கு

வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், உங்களுக்கு அப்படிப்பட்ட பதவி வழங்கப்படவில்லை. நாங்கள் துரோகிகள் இல்லை, உழைத்தவர்கள், மக்களால் போற்றப்படுகின்றவர்கள். துரோகி என்பது யார்? அவர்கள் தான். கொல்லைப்புறத்தின் வழியாக வந்து, இந்தக் கட்சியை அபகரிக்கப் பார்க்கின்றார்கள். இந்த ஆட்சியை கவிழ்க்கப் பார்க்கின்றார்கள். அதற்குத் தக்க பாடத்தை மக்களும் கழகத் தொண்டர்களும் புகுத்துவார்கள் என்பதை இந்த நிகழ்ச்சியின்வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோல் எப்பொழுது பார்த்தாலும் ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார், இதற்கு முன்னால் யாருமே கண்டுபிடிக்கவில்லை. இவர்கள் எப்பொழுது வந்தார்களோ அதற்குப்பிறகு புதுப்புது பெயர்கள் வைத்திருக்கின்றார்கள். இந்த இயக்கத்தை இருபெரும் தலைவர்கள் உருவாக்கினார்கள். இந்த இயக்கத்தில் இருக்கின்ற அத்தனைபேரும், இந்த இயக்கம் உண்மையாக வளர வேண்டும், இந்த ஆட்சி உண்மையாக தொடர வேண்டுமென்று மனசாட்சியோடு இருக்கின்றவர்கள்தான் இந்த இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். உங்களிடத்திலே இருப்பவர்கள் வேண்டுமானால் ஸ்லீப்பர் செல்களாக இருக்கலாம். எங்களிடத்திலே இருக்கின்ற அத்தனைபேரும் பத்தரைமாற்றுத் தங்கமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால், எங்களிடத்தில் இருக்கின்ற அத்தனைபேரும் உழைப்பால் பொறுப்பாளர்களாக வந்தவர்கள். மக்களுக்கு தொண்டாற்றி பெயரும், புகழும் பெற்றவர்கள் எங்களிடத்திலே இருக்கின்றார்கள். உங்களைப் போல் குறுக்கு வழியில் வந்தவர்கள் அல்ல. அவரிடத்திலே யார் இருக்கின்றார்கள். பல கட்சிக்குப் போய்வந்தவர்கள்தான் அவரிடத்திலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட எண்ணம்தான்

அவர்களிடத்தில் வரும், நல்ல எண்ணமே வராது. எங்களுக்கு இதுவரை எத்தனையோ முறை சோதனை வந்திருக்கின்றது. சோதனை வந்தபொழுதெல்லாம் ஸ்லீப்பர் செல் என்று இப்படிப்பட்ட பெயர் வைத்திருக்கின்றார்களா ? எப்பவும் வைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு வீரமணி அவர்கள் சொல்கிறார், கிரிமினல் கண்டுபிடித்தது, அப்படிப்பட்ட சொல்லை. ஏனென்றால் அவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் வரும். அப்படிப்பட்ட புத்தி கொண்டவர்கள் தான் அவர்கள் எல்லாம். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் கொஞ்சநாளைக்குத் தான் அந்தப் பதவியை அனுபவிக்க முடியும். அதற்குமேல் ஆண்டவன் பார்த்துக் கொள்வான். அது எப்படியென்று உங்களுக்குத் தெரியும்.

அதேபோல, இன்றைக்கு இந்த ஆட்சியையும், கட்சியையும் அழிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர். அவரோடு துணைபோய்க் கொண்டிருக்கின்றார் இந்த டிடிவி தினகரன். இருவரும் கூட்டு சேர்ந்துதான் நடைபெற்ற ஆர்.கே.நகர் தேர்தலில் போட்டியிட்டார்கள். கதை என்னவானது, எங்களை வீழ்த்த வேண்டுமென்று நினைத்தார்கள், அவர்களை மக்கள் வீழ்த்திவிட்டார்கள். பத்து கட்சி ஒன்றாக சேர்ந்து கூட்டணி வைத்தும்கூட பெற்ற ஓட்டு சொற்ப ஓட்டு, டெபாசிட்கூட பெறமுடியவில்லை. அதற்குமேல் நான் விட்டுவிடுகின்றேன். ஏனென்றால், இது பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா. இது நூற்றாண்டு விழாவா, கட்சிக்கூட்டமா என்று போனவுடன் கருத்து சொல்வார்கள். இருந்தாலும் கட்சி இருந்தால்தான் ஆட்சிக்கு வரமுடியும், ஆட்சியிலிருந்தால்தான் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முடியும். இன்றைக்கு அவர்களெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் பிறகு இந்த

கட்சி இருக்காது என்று நினைத்தார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்து இந்தக் கட்சியைக் காப்பாற்றி, இன்றைக்கு இந்திய நாடே உற்று நோக்குகின்ற அளவிற்கு ஒரு சிறந்த ஆட்சியை நாட்டு மக்களுக்கு தந்த தலைவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அம்மா மறைவிற்குப் பிறகு இந்த கட்சி அழிந்துவிடும், ஆட்சி கவிழ்ந்துவிடுமென்று கற்பனை கனவு கண்டவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு சாவு மணி அடிக்கப்பட்டுவிட்டது. இந்த ஆட்சியும் கலையாது, இந்த ஆட்சியை கவிழ்க்கவும் முடியாது, இந்த கட்சியையும் உடைக்க முடியாதென்று இந்த பத்தரை மாதகாலத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிரூபித்துக் காட்டிவிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் இதற்கு முன் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். இந்த ஆட்சி பட்ஜெட் போடும்வரை தாக்குப்பிடிக்குமா? மானியக் கோரிக்கை முடியும்வரை இந்த ஆட்சி தாக்குப்பிடிக்குமா? தாக்கு பிடித்துவிட்டது. அதோடு அவர் அப்படி சொல்வதை விட்டுவிட்டார். இப்பொழுது புதிதாக ஒரு ஆள் ஆரம்பித்துவிட்டார், ஹவாலா பார்முலா மூலம் வெற்றி பெற்ற ஒரு ஆள், இந்த ஆட்சியை மார்ச் மாதத்திற்குள் கலைப்பேன் என்று. நீ இருந்தால்தானே கலைப்பாய், எங்கிருப்பாய் என்று பார்த்துக்கொள்ளலாம். ஆண்டவன் ஒருவன் இருக்கின்றார். நல்லது நினைத்தால் நல்லது நடக்கும், கெட்டது நினைத்தால் கெட்டுத்தான் போவார்கள். யார் கெடுதல் நினைத்தாலும் கெட்டுத்தான் போவார்கள். ஏனென்றால் இந்த இயக்கம் சாதாரண இயக்கமல்ல. எனக்கு முன்னால் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களும் குறிப்பிட்டார்கள், எத்தனைபேர் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றார்கள், எத்தனைபேர் போராட்டத்தில் கலந்து சிறை

சென்றிருக்கின்றார்கள். கொஞ்சநஞ்சமல்ல, 1972–லிருந்து 2017 வரை எவ்வளவு சிரமப்பட்டு இந்த இயக்கத்தை கட்டிக்காத்திருக்கின்றார்கள். ஆகவே, அப்படி கட்டிக்காத்த இயக்கத்தை உடைக்க நினைக்கின்றார்கள், அழிக்க நினைக்கின்றார்கள். அவர்கள் எப்படி வாழ்வார்கள் என்பதை இறைவன் பார்த்துக்கொள்வான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது படித்த இளம்பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற செய்தியை சொன்னார்கள். அம்மா பிறந்தநாளான பிப்ரவரி 24, 2018 அன்று அம்மா இருசக்கர வாகனம், பாதி விலை மானியத்தில், ஒரு ஸ்கூட்டர் ரூபாய் 50,000 என்றால், ரூபாய் 25,000 மானியமாக வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். முதலில் ஒரு லட்சம் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தகாலத்திலே தைத்திருநாளன்று, நம் தமிழ்நாட்டு மக்கள் தைப்பொங்கலை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டுமென்பதற்காக தைப்பொங்கல் பரிசு வழங்குவார்கள். அதையும் அம்மாவினுடைய அரசு அறிவித்திருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று காலை அன்புமணி ராமதாஸ் சொல்லியிருக்கின்றார், ICU–ல் இருப்பதுபோல சொல்கிறார். அவர் டாக்டர், அப்படித்தான் கண்ணுக்குத் தெரியும்,

சிந்தனை அப்படித்தான் வரும். 2018–ல் ஊழலற்ற நிர்வாகமாக கொண்டுவரவேண்டுமென்று ஒரு செய்தி வந்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். இவர்கள் மேலிருக்கின்ற சிபிஐ வழக்கு முடியட்டும். ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர் தன் மீது இருக்கும் ஊழலை நிரூபித்துக்காட்டவேண்டும், அதற்குப்பின் சொன்னால் சரியாக இருக்கும். முதலில் அவர்கள் திருந்தட்டும், மற்றவர்களை திருத்தப்பார்க்கட்டும்.

இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது என்பதற்கு ஒரு சான்று, தேசிய குற்ற ஆவனக்காப்பகம் வெளியிட்டு இருக்கும் ஒரு செய்தி. அந்த அறிக்கையில், இந்தியாவிலுள்ள ஆறு மெட்ரோ நகரங்களில், பெண்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உகந்த முதல் பெருநகரமாக இருப்பது தமிழ்நாட்டினுடைய சென்னை மாநகரமாக விளங்குகின்றது. பதிவு செய்யப்பட்டுள்ள பெண்களுக்கு எதிரான குற்றங்கள் டெல்லியில் 25.7 சதவீதம், மும்பையில் 6.4 சதவீதம், கொல்கத்தாவில் 3.5 சதவீதம் உள்ளது. இதுவே சென்னையில் 2 சதவீதமாக உள்ளது. அதுபோலவே அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களில் தமிழ்நாட்டு பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. ஆகவே, சட்டம், ஒழுங்கு எந்தளவிற்கு பேணிக்காக்கப்படுகின்றது என்பதற்கு இதுவே சான்று என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

இது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் நீங்கள் அனைவரும் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இருக்கின்றீர்கள். இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்தால்தான் நாங்களும் மனநிறைவும்

அடைவோம். ஆகவே, நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சீரும் சிறப்போடும் என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு நீலகிரி மாவட்டத்திலே அதிக மக்கள் கொண்ட பொது நிகழ்ச்சி இதுதான் என்று நிரூபிக்கின்ற அளவிற்கு இந்த நிகழ்ச்சியை சீரும் சிறப்போடும் ஏற்பாடு செய்து அதற்கு துணையாக விளங்கிய
மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள்,
நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **கே.ஆர். அர்ஜுனன்**
நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **சி. கோபாலகிருஷ்ணன்**
குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. **அ. ராமு**

மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஏ.கே. செல்வராஜ்,
முன்னாள் அமைச்சர் வாரியத் தலைவர் திரு.மில்லர்,
முன்னாள் அமைச்சர் திரு.புத்தி சந்திரன்,

இந்த நிகழ்ச்சி, சீரும் சிறப்போடும் வெற்றியோடும்
நடைபெற உறுதுணையாக விளங்கிய
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும்,
அரசு அலுவலர்களுக்கும், வருகை புரிந்துள்ள அத்தனை பேர்களுக்கும்
என்னுடைய மனமார்ந்த உளமார்ந்த நன்றியை
இந்த நேரத்திலே தெரிவித்து கொண்டு
இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு வருகின்றபோது,
மேட்டுப்பாளையத்திலே மிகச் சிறப்பான எழுச்சியான
வரவேற்பு நிகழ்ச்சியை நடத்திய மாநிலங்களவை உறுப்பினர்
திரு.ஏ.கே. செல்வராஜ் அவர்களுக்கு, நகரச் செயலாளர் அவர்களுக்கும்,
குழுமி இருக்கின்ற அத்தனை மக்களுக்கும்
நன்றி, நன்றி, வணக்கம்.

**நீலகிரி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்**

1) இம்மாவட்டத்தில் வசித்து வரும் பழங்குடியினரான தோடர், கோத்தர், இருளர், காட்டுநாயக்கர், குறும்பர் மற்றும் பனியர் ஆகியோரின் 500 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவை 5 கோடி ரூபாய் செலவில் பழங்குடியினர் நலத்துறை மூலம் பழுதுபார்க்கப்படும்.

2) குன்னூர் நகராட்சி பேருந்து நிலையம் 44 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

3) கூடலூர் பேருந்து நிலையம் அதிக பேருந்துகளை நிறுத்தும் வகையில் 4.75 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

4) இந்த மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

5) உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட சாலைகள் 2.73 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

6) சுற்றுலா தலமான உதகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதியை மேம்படுத்த, ரோஜா பூங்காவில் பல்வகை அடுக்கு வாகன நிறுத்துமிடம் தனியார் பங்களிப்புடன் 3 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்படும்.

7) உதகமண்டல வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக கட்டப்படும்.

8) உதகை நகராட்சியில் உள்ள கோடப்மந்து கால்வாயில் உள்ள பழுதுகள் நீக்கப்படும்.

9) இம்மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மாணவர்களின் உயர் கல்வி கற்றல் விகிதத்தை அதிகரிக்க ஏதுவாக கோத்தகிரியில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் ஒன்று 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**மருத்துவ வசதிகள்**

10) உயர்தர மருத்துவ வசதிகளுடன் கூடிய நான்கு ‘108 அவசர ஊர்திகள்’ வழங்கப்படும்.

11) நீலகிரி மாவட்டத்தில் 1.09 கோடி ரூபாய் மதிப்பில் **காசநோய் ஒழிப்பு சிறப்பு திட்டம்** தொடங்கப்படும்.

12) நீலகிரி மாவட்டத்தில் 67.5 லட்சம் ரூபாய் மதிப்பில் **புதிய மருந்து கிடங்கு வசதி** ஏற்படுத்தப்படும்.

13) நீலகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 1.50 கோடி ரூபாய் மதிப்பில் **எக்கோகார்டியாகிராம் கருவி, மூப்பியல் பிரிவு, நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி** ஏற்படுத்தப்படும்.

14) நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றும் 194 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட 19.40 லட்சம் மதிப்பில் **கையடக்க கணினி (Tablets) வழங்கப்படும்.**

15) உதகமண்டலம் அரசு மருத்துவமனையில் 64.70 லட்சம் ரூபாய் மதிப்பில் **டயாலிசிஸ், எண்டோஸ்கோப், நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் தடுப்பூசி மருந்து சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும்.**

16) குன்னூர் அரசு மருத்துவமனையில் 64.50 இலட்சம் மதிப்பில் **விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.**

17) நெலாக்கோட்டை அரசு மருத்துவமனையில் 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.

**மின் வசதிகள்**

**18)** நீலகிரி மாவட்டம், கோத்தகிரி கெரடாமட்டம், குன்னூர் சிம்ஸ்பார்க் மற்றும் கோத்தகிரி **அரவேனுவில் புதிய 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள் ரூ.24.55 கோடி செலவில் அமைக்கப்படும்.**

**19)** நீலகிரி மாவட்டம், கடநாடு பஞ்சாயத்தில் புதிய 110/11 கி.வோ. **மலர்பெட்டு துணை மின் நிலையம் 4.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**20)** நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. கட்டபெட்டு துணை மின் நிலையத்தில் **1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றி 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாக தரம் உயர்த்தப்படும்.**

**21)** நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. **ஜெகதளா துணை மின் நிலையத்தில்** 1.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் **தரம் உயர்த்தப்படும்.**

**22)** நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. **உதகை துணை மின் நிலையத்தில்** 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் **2 x 16 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாக தரம் உயர்த்தப்படும்.**

**23)** நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் புதியதாக **கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம்** (Fuse off call centre) 19.50 லட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

**சாலை மேம்பாட்டு வசதிகள்**

**24)** **கொதுமுடி எப்பநாடு சாலையில் 4.40 கி.மீ நீளச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி** மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் 4.75 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

**25)** **ஹெலன் எல்லமலை பெரிய சோலை சாலையில் 6.30 கி.மீ நீள சாலையை மேம்பாடு செய்யும் பணி** மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் 5.35 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

அதேபோல, மேடையில் வீற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் பெருமக்கள், பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலை மானியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு கவனத்தோடு பரிசீலித்து அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று அவர்களது நலன் காக்கும் பொருட்டு 2017–18ஆம் ஆண்டில் பசுந்தேயிலை கிலோ ஒன்றிற்கு ரூ.2/– வீதம் மானியம் அளிக்க உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக கூடுதலாக 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்பதையும் இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக 58 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உதகமண்டலம் நகராட்சி, குன்னூர் நகராட்சி, நெல்லியாளம்

நகராட்சியிலும் மற்றும் அவலாஞ்சியிலும் 1480 பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**